(உ) தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஊ) தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2018 ஜூலை 9] [*திரு. சி.வி. சண்முகம்*]

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(எ) சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*